# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2019-20

## பன்னிரெண்டாம் வகுப்பு

## பொருளியல்

தேர்வு எண் .........

நேரம் 3.00 மணி மதிப்பெண்கள்: 90

பகுதி -அ

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** **20 x 1 = 20**

1. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது ?
   அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. சமத்துவ அமைப்பு இ. உலகமய அமைப்பு
   ஈ. கலப்புப் பொருளாதார அமைப்பு
2. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி.
   அ. ஜே .எம்.கீன்ஸ் ஆ. காரல் மார்க்ஸ் இ. ஆடம்ஸ்மித் ஈ. சாமுவேல்சன்
3. NNP என்பது ____________
   அ. Net National Product ஆ. National Net Product இ. National Net Provident
   ஈ. Net National Provident
4. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் .................. லிருந்து வருகிறது.
   அ. தனியார் துறை ஆ. உள்துறை இ. பொதுத்துறை ஈ. எதுவும் இல்லை
5. . மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
   அ. பூஜ்யம் ஆ. ஒன்று இ. இரண்டு ஈ. நேர்மறை
6. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது .................. ஆகும்.
   அ. வட்டி வீதம் ஆ. விளைவுத்தேவை இ. தொகுத்தேவை ஈ. தொகு அளிப்பு
7. கீன்ஸின் நுகர்வுச் சார்வு C = 10 + 0.8 ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் 1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு ?
   அ) 0.8 ஆ) 800 இ) 810 ஈ) 0.81
8. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்.
   அ) J. R. ஹிக்ஸ் ஆ) R.G.D. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்
9. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
   அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914
10. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
    அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
    ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
    இ) அந்நிய செலாவணி விகிதம் ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்
11. ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன ?
    அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் ஆ) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்
    இ) தானாக பணம் வழங்கும் முறை ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money)
12. இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தலை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும்
    அ. சுங்கத் தீர்வையைக் குறைத்தல் ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல்
    இ. ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல் ஈ. இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்
13. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும்
    அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்
14. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது ?
    அ) யூட்ரோபிகேசன் ஆ) சத்துக்களை கட்டுப்படுத்துதல் இ) செறிவூட்டல் ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்
15. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை
    அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி இ) பகுதியாகச் செலுத்துதல் ஈ) இவை அனைத்தும்
16. கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது ?
    அ) மக்கள் திட்டம் ஆ) பாம்பே திட்டம் இ) காந்தியத் திட்டம் ஈ) விஸ்வேசுவரய்யா திட்டம்
17. “ அடிமைத்தனத்திற்கான பாதை “ என்ற புத்தகத்தை எழுதியவர் யார் ?
    அ) பிரடெரிக் ஹேயக் ஆ) ஜெ .ஆர் ஹிக்ஸ் இ) டேவிட் ரிக்கார்டோ ஈ) டி.ஆர். மால்தஸ்

A.Alexis DBHSS.V.Net

18. பொருளாதார வளர்ச்சி ……………….. ஐ அளவிடுகிறது

அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு

இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை

19. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது -----------.

அ) முதல்நிலை விவரம் ஆ) இரண்டாம் நிலை விவரம்

இ) வெளியிடப் பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

20. பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு ?

அ) 3 பாடங்கள் ஆ) நான்கு பாடங்கள் இ) 2 பாடங்கள் ஈ) 5 பாடங்கள்

## பகுதி –ஆ 7X2=14

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளி**

21. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.
22. தனிநபர் வருமானம் என்றால் என்ன ?
23. உலக வெப்பமயமாதல் என்பதன் பொருள் யாது ?
24. உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு தருக.
25. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் வரையறு.
26. தேக்கவீக்கம் என்றால் என்ன ?
27. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக.
28. பொருளாதார முன்னேற்றம் என்பதை வரையறு.
29. உடன் தொடர்பு என்பதனை வரையறு.
30. பொதுக் கடன் என்பதன் பொருள் யாது ?

## பகுதி - இ 7x3=21

**III. ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி**

A.Alexis.DBHSS.V.Pet

31. சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.
32. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?
33. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.
34. பண அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?
35. வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
36. ஆசியான் அமைப்பின் சாதனைகளை பட்டியலிடுக.
37. நவீன அரசின் பணிகள் யாவை ?
38. குறிப்பு வரைக. அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை.
39. புள்ளியியலின் பணிகள் யாவை ?
40. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.

## பகுதி -ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி. (அல்லது)
தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.
42. வேலையின்மையின் வகைகளை விவரி. (அல்லது)
நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.
43. பண வீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை விவரி. (அல்லது)
பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை ? விளக்குக.
44. பணத்தின் பணிகளை விளக்குக. (அல்லது)
நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.
45. உள்நாட்டு வணிகத்துக்கும் பன்னாட்டு வணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.
(அல்லது) உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.
46. நிதிக் கொள்கையின் கருவிகள் யாவை ? (அல்லது)
மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை விளக்குக.
47.திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும். (அல்லது)
பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| X | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |